மகளிர் திட்டம் – மகளிர் சுய உதவிக்குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் – தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975–ன் கீழ் பதிவு செய்தல்

---

<u>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ( மஅதி3) துறை</u>

அரசாணை (நிலை) எண்.135 நாள்: 14.8.2008.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை நிலை எண்.116, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (ச.ந.3) துறை, நாள் 31.7.2007.
2. அரசாணை நிலை எண்.125, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை, நாள் 21.7.08.
3. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன நேர்முக கடித எண்.1719/பி/2007 நாள் 18.3.08.

* * * * *

**ஆணை:**

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கிராம ஊராட்சி மற்றும் வட்டார அளவிலான மகளிர் சுய உதவிக் குழு கூட்டமைப்புகளை அமைப்பது, அதன் உறுப்பினர்கள் நியமித்தல், அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய பயிற்சி, குழுவின் செயல்பாடு, நடைமுறை போன்ற வரையறைகளை நிர்ணயித்து ஆணையிடப்பட்டது.

2. இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சுய உதவிக் குழுக்களுக்கான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறு சீரமைத்து, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் வடிவமைப்பு, உறுப்பினர் தகுதிகள், கூட்டமைப்பின் நிர்வாக அமைப்பு, கடமைகள், பொறுப்புகள், சமூக தணிக்கைக் குழு அமைத்தல், வங்கிக் கணக்குகள், பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள், வரவு செலவு கணக்கு பராமரிப்பு மற்றும் குடியிருப்பு அளவிலான மன்றங்கள் அமைத்தல் மற்றும் அதன் செயல்கள் தொடர்பாக விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வகுத்து ஆணையிடப்பட்டது.

3. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மூன்றாவதாகப் படிக்கப்பட்ட நேர்முக கடிதத்தில் சுய உதவிக் குழுக்களை மேலும் வலுப்படுத்தி நிலைத்த தன்மை அடைவதற்காக கிராம ஊராட்சி, வட்டாரம் மற்றும் மாவட்ட அளவிலான சுய உதவிக் குழுக்கள் கூட்டமைப்பு அமைக்கப்பட்டன என்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மேலும் வலுப்பெறவும், தொழில் தொடங்கவும், கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி மூலம் கடனுதவி செய்யவும் அவைகள் பதிவு பெற்ற சங்கங்களாக இல்லாததால் வங்கிகள் கடன் வசதி அளிக்க விரும்பவில்லை எனவும் இந்திய ரிசர்வ் வங்கியின் குறிப்பிட்ட ஆணையின்படி சுயஉதவிக் குழுக்கள் சங்கங்களாக பதிவு செய்யப்படாவிட்டாலும், அவற்றுக்கு வங்கிக் கடன் கொடுக்கப்படுகின்றது என்றும், ஆனால் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் பதிவு பெற்ற அமைப்புகளாக இருந்தால் மட்டுமே கடன் வசதி பெற இயலும் என்றும் தெரிவித்துள்ளார்.

4. மேலும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள் தொழிலுக்கு தேவையான மூலப் பொருட்களை கொள்முதல் செய்தல், பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்தல் ஆகியவற்றில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஈடுபட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும் கூட்டமைப்புகள் இந்நடவடிக்கைகளை சுயமாகவும், தங்களது உறுப்பினர் குழுக்களின் சார்பாகவும் மேற்கொள்ளலாம் என்றும், இவ்வாறு கொடுக்கப்பட்ட உரிமைக் கட்டளைகளை செயலாக்கவும் கூட்டமைப்புகளின் செயல்பாடுகள்படியும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சிறந்த முறையில் செயல்படுவதை எளிதாக்கும் விதமாக அவற்றை தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975ன் படி பதிவு செய்ய ஆணை வழங்குமாறு கோரியுள்ளார்.

5) தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, சுய உதவி குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைத்து கூட்டமைப்புகளை தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975–ன் கீழ் பதிவு செய்ய அரசு ஆணையிடுகிறது. தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975–ன் பிரிவு 54–ன் கீழ், விதிவிலக்கு கோரப்பட்ட பிரிவு 25 மற்றும் 42 ஆகியவற்றிற்கு வணிகவரி மற்றும் பத்திரப் பதிவு துறையினரால் ஆணை தனியாக வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக்வர்தன் ஷெட்டி,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**